தாக செய்திகள், சீரியஸ் சார்ஜஸ் கவர்ன்மெண்ட் பேரில் வந்திருக்கின்றன. அதைப்பற்றி சீரியசான இன்வெஸ்டிகேஷன் நடத்தப்பட்டதா? லோகல் போலீஸ் இன்வெஸ்டிகேஷன் ஆபீசர்மீது செபரேட்டாக இன்வெஸ்டிகேஷன் நடத்தியிருக்கிறதா? அப்படியிருந்தால் அதனுடைய ரிசல்ட் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்ற அப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு வரவில்லை. ஆகவே, ஆங்காங்கே அப்படி சுடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவ்வப்போது வெளியே இப்படி நடந்திருக்கிறது. காவல் நிலையத்தில் வைத்து சுட்டார்கள் என்ற அளவில் புகார்கள் வருமேயானால், அதைப்பற்றி விசாரித்தறிந்து நடவடிக்கை எடுக்க இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது. ஆனால் இதுவரை பல்வேறு இடங்களில், குகைகளில், மலைப் பகுதிகளில் ஒளிந்திருந்து, பிடிபட்ட இடத்தில் சுட நேர்ந்தது என்றுதான் செய்திகள் வந்திருக்கிறதே தவிர, காவல் நிலையத்தில் வைத்துச் சுட்டார்கள் என்ற செய்தியோ, நிலைமையோ இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற குற்றச்சாட்டுகள் வருமேயானால், இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, நக்சல்பாரி பேரால் இடையிலே அவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் இயக்கத்திற்குச் சம்பந்தமில்லாமல் கொள்ளையடித்தல், கொலை செய்தல், அச்சுறுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்ற வகையில்தான் நாட்டில் அதிகமாக இருக்கிறது. அப்படிப்பட்ட வகையில் இன்றைய தினம் தர்மபுரி மாவட்டம் தவிர வட ஆற்காடு மாவட்டத்திலும் பல பேர்கள் இருக்கிறார்கள் என்ற செய்தி இருக்கிறது. ஆகவே, தர்மபுரி மாவட்டத்தில் இப்போது கைது செய்யப்பட்டிருப்பவர்கள் எத்தனை பேர்கள்? அதிலே இறந்து போனவர்கள் எத்தனை பேர்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 525-ஆ, 525-இ ஆகியவைகளும் நக்சல்பாரிகளைப் பற்றியதாக இருக்கின்றன, எனவே, இந்த இரண்டுக்கும்கூட அமைச்சர் பதிலளித்துவிடலாம். உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்க வசதியாக இருக்கும்.

*வினா எண் 525-ஆ—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நக்சல்பாரிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க காவல் படைப் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

1981 மார்ச் 28] [மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

(அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு, தருமபுரி மாவட்டங்களில் நக்சல்பாரி களின் பயங்கரச் செயல்களை ஒடுக்கும் பொருட்டும், வட ஆற்காடு மாவட்டத்தில் தற்போதுள்ள 8 காவல் நிலையங் களிலும் தருமபுரி மாவட்டத்தில் உள்ள 13 காவல் நிலையங்களிலும் உள்ள பணியாளர் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும் பொருட்டும் அரசு கூடுதலாகக் கீழ்க்காணும் பணி யாளர்களை நியமிக்க ஒப்புதல் அளித்துள்ளது. அன்றியும் வட ஆற்காடு மாவட்டத்தில் ஏலகிரியிலும், குரிச்சில்லாப்பட்டு என்னு மிடத்திலும், தருமபுரி மாவட்டத்தில் போச்சம்பள்ளி என்னு மிடத்திலும் மேலும் புதிதாக மூன்று காவல் நிலையங்களை அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

காவல்துறை கூடுதல் சூப்பிரண்டு		..	1 (வேலூர் சரக டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலின் பொறுப்பின் கீழ் திருப்பத்தூரில் இப்போது நியமிக்கப் பட்டுள்ளார்.)
காவல் துறை டெபுடி சூப்பிரண்டு		..	1
காவல்துறை இன்ஸ்பெக்டர்கள்		..	2
காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர்கள்	..	..	5
காவல்துறை சப்இன்ஸ் பெக்டர்கள்		..	7
ரிசர்வ் சப்இன்ஸ்பெக்டர்கள்	..	..	2
உதவி சப்இன்ஸ்பெக்டர்கள்	..	..	10
ரிசர்வ் உதவி சப்இன்ஸ்பெக்டர்கள்		..	2
தலைமைக் காவலர்கள்	..	..	51
முதல் நிலைக் காவலர்கள்	..	..	11
நாயக்	.. ..	..	12
லான்ஸ் நாயக்	.. ..	..	8
இரண்டாம் நிலைக் காவலர்கள்	..	..	369
நிர்வாகப் பணியாளர்கள்—			
உதவியாளர்கள்	.. ..	..	2
இளநிலை உதவியாளர்கள்	..	..	2

*வினா எண். 525-இ.— திரு. கு. ரமணி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—